**செய்தி வெளியீடு எண்: 456** **நாள் : 17.09.2015**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.9.2015 அன்று தலைமைச் செயலகத்தில், திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்கள் பயன்பெறும் வகையில் 206 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை துவக்கி வைத்து, பூஜையே செய்ய வசதி இல்லாத 10,000 சிறு சிறு திருக்கோயில்களுக்கு தலா 2440 ரூபாய் மதிப்பிலான 5 பூஜைப் பொருட்களை திருக்கோயில் பூசாரிகளுக்கு வழங்கினார்கள். மேலும், திருக்கோயில்களில் நடைபெறும் அன்னதானத் திட்டத்தில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் 820 பணியாளர்களுக்கு பணி வரன்முறை செய்து காலமுறை ஊதியத்திற்கான ஆணையினை வழங்கினார்கள்.

“உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே” என்ற புறநானூற்று வரிகளுக்கேற்ப திருக்கோயில்கள் வாயிலாக இறை அன்பர்களுக்கு அமுது படைக்கும் அன்னதானத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2002–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ஆம் நாளன்று மைலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் தற்போது 518 திருக்கோயில்களில் நடைபெற்று வரும் அன்னதானத் திட்டத்தினால் ஒரு நாளைக்கு சுமார் 47809 பக்தர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இந்தத் திட்டம், ஆன்றோர்கள், சான்றோர்கள், இறையன்பர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதை அடுத்து, திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு பெரும் பயனளிக்கும் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 206 திருக்கோயில்களுக்கு அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, 206 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

15.9.2015 அன்று துவக்கி வைத்தார்கள். இதன் மூலம் திருக்கோயில் ஒன்றுக்கு 50 பக்தர்கள் வீதம், நாளொன்றுக்கு 10,300 பக்தர்கள் பயன் பெறுவர்.

கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்கள் உள்ளிட்ட 10,000 சிறு சிறு திருக்கோயில்களுக்கு முறையான பூஜை செய்திட ஏதுவாக, பித்தளைத் தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகியவை 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் வாங்கி வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.8.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள். அதன்படி, பூஜையே செய்ய வசதி இல்லாத 10,000 சிறு சிறு திருக்கோயில்களுக்கு தலா 2440 ரூபாய் மதிப்பிலான 5 பூஜைப் பொருட்கள், என மொத்தம் 2 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பூஜைப் பொருட்களை வழங்கும் அடையாளமாக 5 திருக்கோயில் பூசாரிகளுக்கு பூஜைப் பொருட்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் பணிகளில் சமையல் செய்பவர், உதவியாளர், துப்புரவாளர் என்ற நிலைகளில் 673 நபர்கள் தினக் கூலி அடிப்படையிலும், 147 நபர்கள் தொகுப்பூதிய அடிப்படையிலும், என மொத்தம் 820 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் நீண்ட காலமாக தங்களுடைய வாழ்வாதாரத்தை சீரமைத்திட தங்கள் பணியினை ஊதிய விகித அடிப்படையில் வரன்முறைப்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர். இவர்களது குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தினக் கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் பணியாளர்களின் தகுதி மற்றும் நன்னடத்தை அடிப்படையில் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களது பணி வரன்முறை செய்யப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.8.2014 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, திருக்கோயில்களில் நடைபெறும் அன்னதானத் திட்டத்தில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வரும் 820 பணியாளர்களுக்கு பணி வரன்முறை செய்து காலமுறை ஊதியத்திற்கான ஆணையினை வழங்கிடும்

அடையாளமாக 2 பணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். காமராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. சண்முகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் முனைவர் மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப., கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 17.9.2015